**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபை வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16<br>(i) பந்தி 34 இன் படி, ஆதனம் பொறி மற்றும் உபகரணம் ஒவ்வொரு 05 ஆண்டிற்கும் ஒரு முறை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், சபையினால் பயன்படுத்தப்பட்ட | மதிப்பின் போதுமான உயர்ந்த பெறுமதியின் அளவை கருத்தில் கொண்டு, நியாயமான மதிப்புகள் குறிப்பிடத்தக்க கார்கள் மட்டுமே 2022 ஆம் | நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தயாரிக்க பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் 2013 இன் பின் மீண்டும் மீள் மதிப்பீடு செய்யப்படவில்லை,எனவே ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் நியாயமான பெறுமதி மதிப்பிடப்படவில்லை. | ஆண்டில் மீள் மதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டன. பிற சொத்துகளின் இருப்பு ஆண்டு சொத்து சரிபார்த்தல் மூலம் உறுதிப்படுத்தப்படுவதன் மூலம் அவற்றை மீள்மதிப்பீடு செய்வது பொருளாதார ரீதியாக சாத்தியமானது அல்ல. | |
| (ii) பந்தி 51 இன் படி, நடைமுறையல்லா சொத்தின் வினைதிறனான ஆயுட்காலம் ஆண்டு தோறும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.முற்றாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 42,139,250 பெறுமதியான மோட்டார் கார் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகிறது.இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி, எழுந்த மதிப்பிடப்பட்ட பிழை சரியாக மீள்மதிப்பு செய்யப்படவில்லை. | மதிப்பின் போதுமான உயர்ந்த பெறுமதியின் அளவை கருத்தில் கொண்டு, நியாயமான மதிப்புகள் குறிப்பிடத்தக்க கார்கள் மட்டுமே 2022 ஆம் ஆண்டில் மீள் மதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டன. பிற சொத்துகளின் இருப்பு ஆண்டு சொத்து சரிபார்த்தல் மூலம் உறுதிப்படுத்தப்படுவதன் மூலம் அவற்றை மீள்மதிப்பீடு செய்வது பொருளாதார ரீதியாக சாத்தியமானது அல்ல. | நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தயாரிக்க பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் படி, நிகழ்கால பெறுமதியின் வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடு பணிக்கொடை ஏற்பாட்டில் காட்டப்பட வேண்டும் மற்றும் அனைத்து நோக்கத்திற்குமான இலாப மற்றும் நட்டங்கள் முற்றடக்க வருமானகூற்றில் காட்டப்பட வேண்டும்.எனினும் மீளாய்வாண்டில் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9,196,815 ற்கு குறிப்பிட்ட கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் இருந்து கணக்குகளை தயாரிக்கும் போது பணிக்கொடை ஏற்பாட்டினை கணக்கிடும் போது ஆயுட்கால இலாப மற்றும் நட்டங்களை கணக்கிடுவதற்காக சபையானது நிபுணர்களின் உதவியை எதிர்பார்க்கிறது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)மீளாய்வாண்டின் இறுதியில் சபையால் ஏற்றுமதியாளரிற்கு வழங்கப்பட்ட கடன் மீதி ரூபா 38,805,509 மற்றும் இவற்றில் ரூபா | கணக்காய்வு குழுவின் ஆலோசனையின் படி,ஏற்றுமதியாளர்களிற்கு வழங்கப்பட்ட கடன் நிலுவைகளை விசாரித்து வசூலிக்க மூன்று அதிகாரிகள் | திட்டவட்டமான அறவிடமுடியா கடன் மீதிகள் சரியாக அடையாளம் காணப்பட்டு தாமதமின்றி தேவையான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| 37,609,509 ஆனது 23 வருடத்திற்கானது மற்றும் 15 ஆண்டிற்கான பழைய கடன் மீதி ரூபா 1,196,000 ஆகும். எனினும், சபை மீளாய்வாண்டு இறுதியில் குறிப்பிட்ட கடனை மீள பெற முடியவில்லை. | கொண்ட குழு 02 டிசம்பர் 2021 அன்று நியமிக்கப்பட்டது மேலும் முறையே 2021 ஆம் ஆண்டில் ரூபா 408,000 மற்றும் 2022 ஏப்ரல் 25 ற்குள் ரூபா 471,500 மீள பெறப்பட்டது. | உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ)ஊவா பரணகம ஏற்றுமதி உற்பத்தி கிராம (யுபிஇவிபி) கம்பனி வழங்கப்பட்ட ரூபா 10,403,683 ஆனது மீதியாக காணப்பட்டது மற்றும் 2009 இல் இருந்து 12 ஆண்டு காலத்திற்கு கணக்குகளில் காட்டப்பட்டது மற்றும் சபை முழுதொகை அல்லது பகுதி தொகையை மீள பெறமுடியவில்லை. | ஊவா பரணகம உற்பத்தி கிராம வேலைத்திட்டம் தற்போது செயலற்ற நிலையில் உள்ளது.எனினும்,இது தொடர்பான தகவல்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக,இதுவரை எந்த தொகையும் சேகரிக்கப்படவில்லை.மேலும் கணக்காய்வு குழுவின் ஆலோசனையில் ஊவா பரணகம ஏற்றுமதி உற்பத்தி கிராம நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றும் போது தேவையான தகவல்களை பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டலுடன் பணத்தை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 212,526,203 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 74,011,899 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 138,514,304 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இணைந்த கம்பனியின் முதலீட்டில் இருந்து பெற்ற ரூபா 52,639,028 இலாபம் அதிகரித்தமை மற்றும் திறைசேரியிடம் இருந்து பெறப்பட்ட நிதி ரூபா 122,655,109 என்பன முன்னேற்றத்துக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)சபையானது 31 டிசம்பர் 2021 இல் 34 கம்பனிகளில் ரூபா 56,332,354 பெறுமதியான சாதாரண பங்குகளில் முதலீடு செய்தது மற்றும் இவற்றில் 23 கம்பனிகளில் முதலிடப்பட்ட பெறுமதி ரூபா 36,271,994 ஆனது 31 டிசம்பர் 2021 இல் தொடர்ந்தும் | செயற்பாட்டில் உள்ள பெரும்பாலான கம்பனிகள் நட்டத்தில் இயங்குவதால் பங்கிலாபத்தை அறிவிக்கவில்லை.எனினும் அந்த கம்பனிகளில் இருந்து சபைக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து | சபையால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து நன்மைகளை பெறுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டில் இருந்தது.மேலும்,மீளாய்வாண்டில் செயற்பாட்டில் இருக்கும் 23 கம்பனிகளில் 02 கம்பனிகளில் இருந்து மாத்திரம் ரூபா 40,345,573 பங்கிலாபமாக பெறப்பட்டது. | ஆராய சம்பந்தப்பட்ட கம்பனிக்கு சபையின் பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.டிஎச்பிஎல் தவிர, சபையில் இருந்து ஏனைய நான்கு கம்பனிகளில் இயக்குனர் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.அத்தகைய கம்பனிகளிற்கு பிரதிநிதிகளை நியமிக்க வாய்ப்பு இல்லாமையால்,சபைக்கு கிடைக்கும் சலுகைகள் குறித்து ஆராய அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ)சபையானது 31 டிசம்பர் 2021 இல் 29 கம்பனிகளில் ரூபா 105,117,478 பெறுமதியான மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகளில் முதலீடு செய்தது மற்றும் இவற்றில் 16 கம்பனிகளில் முதலிடப்பட்ட பெறுமதி ரூபா 81,877,780 ஆனது 31 டிசம்பர் 2021 இல் தொடர்ந்தும் செயற்பாட்டில் இருந்தது.எனினும்,மீளாய்வாண்டில் மேலே உள்ள செயற்பாட்டில் இருக்கும் கம்பனிகளின் முதலீட்டில் இருந்து இலாபம் பெறப்படவில்லை. | இந்த கம்பனிகளில் இலாபமான நிலையில் உள்ள கம்பனிகளின் நிதி மற்றும் செயற்பாட்டு நிலை மற்றும் எதிர்காலத்தில் சபைக்கு பெறக்கூடிய பங்கிலாப திறன் ஆகியவற்றை விசாரிக்க சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சபையால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து நன்மைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயலற்ற அல்லது பயன்படுத்தப்படாத ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டிஎச்பிஎல் கட்டிடத்தில் 05,06,07,08 மற்றும் 09 ஆம் மாடியில் 14,097 சதுர அடி உள்ள உள்ள மொத்த நில பரப்பு சபையினால் வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்டது.கணக்காய்வு பரீட்சையின் படி பின்வரும் அவதானிப்புகள் கட்டிடத்தை பயன்படுத்தல் மற்றும் வாடகை செலுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) கட்டிடத்தில் 09 ஆம் மாடியில் உள்ள 120.96 மற்றும் 178.25 சதுர அடி உள்ள இரண்டு அறைகள் இரண்டு தனிப்பட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு எண் 12(1) இன்படி,இறப்பர் குளோபல் கன்சோர்டியம் (தனியார்) நிறுவனம் (எஸ்எல்ஐஎன்ரிஇசி)ஆகியவற்றிற்கு குறுகிய காலத்திற்கு முகாமைத்துவத்தின் அனுமதியுடன’ | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் இன்றி வாடகைக்கு விடப்பட்டது மற்றும் குறிப்பிட்ட ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்பு 10 டிசம்பர் 2019 இல் இருந்து அந்த அறைகள் எந்த உற்பத்தி பயனும் இன்றி வீணாக இருந்தன. | இலக்குகளை அடைவதற்கு வழங்கப்பட்டது.கோவிட் தொற்றுநோய்,நாட்டை பூட்டுதல் மற்றும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தியதன் காரணமாக மேற்கூறிய நிறுவனங்கால் ஏற்றுமதி அபிவிருத்தி சபை கட்டிடத்திற்குள் இயங்க முடியவில்லை. | |
| (ii) | 09 ஆம் மாடியில் சபையின் மேற்பார்வை செயற்பாட்டிற்காக 389.4 சதுர அடி பரப்பு மற்றும் 08 ஆம் மாடியில் உள்ள 508.75 சதுர அடியானது சபையின் ஏற்றுமதி சேவைபிரிவு மற்றும் உற்பத்தி மேம்பாட்டு பிரிவுக்காக ஒதுக்கப்பட்டது.ஆனால் மீளாய்வாண்டில் அந்த இடம் பயன்படுத்தப்படவில்லை. | செயற்திறன் மேற்பார்வை பிரிவு 09 ஆவது மாடியில் 389.4 சதுர பரப்பளவுடன் 2017 இல் நிறுவப்பட்டது.31 டிசம்பர்2020 வரை சபையில் 60 வெற்றிடங்கள் இருந்தன.ஆகையால் செயற்திறன் மேற்பாவை பிரிவில் உள்ள அலுவகங்கள் தற்காலிகமாக கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவுக்கு இடமாற்றப்பட்டனர்.வெற்றிடங்கள் நிரப்பப்பட்டவுடன் குறிப்பிட்ட இடம் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும்.08ஆவது தளத்தில் உள்ள 508.75 சதுர அடி பரப்பளவுள்ள நிலப்பரப்பு உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு அல்லது பதிவு அறைக்காக எதிர்காலத்தில் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. | வாடகைக்கு விடப்பட்ட கட்டிடம் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | இதன்படி, 1197.61 சதுர அடி இன்னும் பயன்படுத்தப்படவில்லை மற்றும் சபையில் மீளாய்வாண்டில் ஒரு சதுர அடிக்கு ரூபா 5,282 வீதம் ரூபா 6,325,776 தொகையானது பயன்படுத்தாத இடத்திற்காக மொத்த வாடகையாக செலுத்தப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்பியதன் பின்னர் ஏற்றமதியாளரிற்கு உரிமம் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக அறிவு சார் சொத்துரிமைகள் பயன்படுத்துவதற்கு மற்றும் சபையால் சொந்தமான உரிமத்தினை பயன்படுத்துவதற்கு மற்றும் பௌதீக குறிகாட்டிகளாக சான்றளிக்க கூடிய உற்பத்திகளை பற்றி ஆய்வு செய்வதற்கு புதிய பிரிவுகளை நிறுவுவதற்கு மற்றும் சந்தை ஆராய்ச்சி நடத்தவும் இந்த இடம் பயன்படுத்தப்படும். | வாடகைக்கு விடப்பட்ட கட்டிடம் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 263 மற்றும் உள்ளபடியான பதவியணி 196 ஆக காணப்பட்டதால் 67 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 20 பதவிகளும் 10 மூன்றாம் நிலை பதவிகளும் 21 இரண்டாம் மட்டத்திலான பதவிகளும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுபையின் முக்கிய பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மற்றும் 16 ஆரம்ப மட்டத்திலான பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன.

மீளாய்வாண்டின் போதிலும் சபையின் முக்கிய குறிக்கோளை அடைவதற்கு நேரடியாக ஈடுபடும் 05 முக்கிய பதவிகளான யக்குனர் தலைமையதிபதி, இயக்குனர் (மனிதவளம்) ,இயக்குனர் (நிதி),இயக்குனர் (வியாபார வசதிகள் மற்றும் வியாபார தகவல்) மற்றும் இயக்குனர்(தகவல் தொழில்நுட்பம்) ஆகியவற்றை ஆட்சேர்ப்பு செய்வதற்கு சபையானது நடவடிக்கை எடுக்கவில்லை.